110

நமது சமூகத்தின் பூர்வீகம் ?

By

ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி

முன்னுரை

சில ஆண்டுகள் 'புனு' நகரில் வசிக்கும் வாய்ப்பு எனக்கு இருந்தது. அவ்வமயம் மராட்டியமக்கள் என்னை அவர்களின் வகுப்பினரைச் சேர்ந்தவருகவே கருதினர். என்பெயர் 'கிருஷ்ணமூர்த்தி' என்பதற்குப் பதிலாக 'குல்கர்ணி' என்கிற பெயரில் உணவு வினியோக அடையாளச் சீட்டு வழங்கினர். அங்கு நான் சந்தித்த ஸௌராஷ்ட்ர தேசத்து மக்களோ, நமது பூர்வீகம் ஸௌராஷ்ட்ரம் என்றும், நான் பேசுவது ஸௌராஷ்ட்ர மொழியென்றும், நான் கூறியதை ஏற்க மறுத்தனர். நான் பேசுவது மராட்டிய மொழியே யென சாதித்தனர். இதுவே என் சிந்தனையைத் தூண்டியது. பற்பல சரித்திர நூல்களைப் படித்து நம் சமூக வரலாறு பற்றிய உண்மையான ஆதாரங்களை கண்டு பிடிக்க முயற்ச்சிக்கலானேன். ஆனால் நான் இன்னும் ஆரம்பநிலையிலேயே இருக்கிறேன். இதன் மூலம் எனக்குத் தோன்றிய கருத்துக்களை நம் சமூக மக்களிடம் அறிவிக்க நினைத்தும் தற்சமயம் நடக்கும் நமது மகாநாட்டையனுசரித்தும் இந்நூல வெளியிட்டுள்ளேன். என்னுடைய ஆராய்ச்சியை மேற்கோண்டு நடத்த நமது மக்கள் எனக்கு மேலும் ஊக்கமளிக்க வேண்டுகிறேன். இந்நூலை வெளியிடுவதற்கு ஊக்கமளித்தவரும் எனக்கு மிகுந்த உதவியாக இருந்தவரும் என்னுடைய மருமகனுமான திரு. ஜுட்டி ப. ஜவஹர்லால் அவர்களுக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொளகிறேன.

மதுரை-9.
16-2-1981

அனந்து. கூ. கிருஷ்ணமூர்த்தி

நம் சமூகத்தின் பூர்வீகம் ?

(ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி)

1, சூரியன் பூமியைச் சுற்றுகிறது ?

"நாம் ஸௌராஷ்டரர்கள். ஸௌராஷ்டர தேசத்திலிருந்து சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வெளியேறித் தமிழ்நாட்டில் குடியேறியவர்கள். நாம் பேசும் மொழி ஸௌராஷ்ட்ரம்", இது தான் நம் சமூகத்தினரின் பொதுவான கருத்து. இது பற்றிய கட்டுரைகள் சிலரால் எழுதப்பட்டு அப்போதைக்கப்போது வெளியாகியுள்ளன. இவை நம் சமூக வரலாறு ஆராய்ச்சியாளர்களின் ஒரு அனுமானத்தை வைத்து குறிப்பிடப்பட, அவையே நம் சமூகத்தவர்கள் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டன.

சுமார் 200 ஆண்டுகள் முன் வரை உலக மக்கள் உலகம் தட்டையானதென்றும், சூரியன் பூமியை சுற்றி வருகிறதென்றும், அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை கொண்டிருந்தனர். ஆனால் இப்போது இவ்விதம் யாராவது சொன்னால் அவனை பைத்தியக்காரனனென்று சொல்வோம். இது போன்று இன்னும் அநேக நம்பிக்கைகள் மக்களிடம் உள்ளன. நாம் ஸௌராஷ்ட்ரர் என்று சொல்லிக் கொள்வதும் இது போன்ற ஒரு நம்பிக்கை தான் என்பது எனது அபிப்பிராயம்.

2. கி. பி. 1312 ஆம் ஆண்டு எதைக் குறிப்பிடுகிறது ?

நம் பூர்வீக மக்கள் எந்தக்காலம் வரை ஸௌராஷ்ட்ர தேசத்தில் வசித்து வந்தார்களென்றும், அவர்கள் தமிழ்நாட்டுக்கு எப்போது எவ்விதம் வந்தார்களென்பதற்கும் இதுவரை நம்மிடம் யாதொரு ஆதாரமும் இல்லை. நாம் சாதாரண மக்களானபடியால் நம்முடைய நடவடிக்கைகள் பற்றிய ஆதாரங்கள் சரித்திரத்தில் காணப்படுவது அரிது. ஆகவே, நம்மில் சிலர் சிற்சில அனுமானங்களை வைத்து ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து நாங்கள் வந்துள்ளோமென்றும், நாம் வெளியேறியதற்கு முக்கிய காரணம் முகம்மதியர்

களின் படையெடுப்பென்றும் கூறி இருக்கின்றனர். இதையனுசரித்து திருமணகாலங்களில் நிச்சயதாம்பூல தினத்தன்று, நாம் ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து மதுரைக்கு யாத்திரை வந்தவர்களென்று சொல்கிறோம். இது தவிர நம் சபையினர் "ஸௌராஷ்ட்ர விஜயாப்தம்" என 1312ம் ஆண்டை ஆரம்பமாக கணக்கிடுகின்றனர்.

மஹாராஷ்ட்ர நகரமான 'தேவகிரி' நான்கு தடவைகளில் தாக்கப் பட்டதாகச் சரித்திரம் கூறுகிறது. முதல் படையெடுப்பு அலாவுதீன்கில்ஜி என்பவரால் 1294ல் ஏற்பட்டுள்ளது. இவர் பெரும் பொருளையும் கப்பம் பெறும் உரிமையும் பெற்று திரும்பிவிட்டார். இரண்டாவது படையெடுப்பு உலூக்கான் என்பவரால் 1297ல் நடந்துள்ளது. இவரும் பொருள் பெற்றுத் திரும்பிவிட்டார். மூன்றாவது தடவையாக மாலிக்கபூர் என்பவர் 1306ம் ஆண்டு படையெடுத்துள்ளார். நான்காவது தடவையாக மறுபடியும் 1313ம் ஆண்டு படையெடுத்த மாலிக்கபூர் நகர் பூராவும் கொள்ளையடித்து நாசம் செய்ததுடன் தேவகிரி அரசரையும் கைது செய்தார்.

மாலிக்கபூர், 1306ம் ஆண்டு தேவகிரி படையெடுப்புக்குப்பின் தெற்கு நோக்கி வந்து. 1308ல் ஓரங்கல்லையும், 1310ல் கோர சமுத்திரம் எனும் நகரையும், 1311ல் மதுரையையும் தாக்கியுள்ளார். ஏறக்குறைய 1312ம் ஆண்டு முதல் மதுரையில் சுல்தான் ஆட்சி ஆரம்பமாகியுள்ளது. இவர்கள் 1312ம் ஆண்டை ஒரு வெற்றி ஆண்டாகக் கணக்கிட்டுள்ளனர். இந்நிலையில் நாம் எதை ஆதாரமாகக் கொண்டு 'ஸௌராஷ்ட்ர விஜயாப்தம் 1312ம் ஆண்டு' என்று கணக்கிட ஆரம்பித்தோம் என்பது விளங்கவில்லை.

3. கற்பனை விளக்கங்கள்

இனி மேற்சொன்ன விளக்கங்கள் பற்றி ஆராய்வோம். முதலில் நாம் திருமணகாலத்தில் சொல்லும் யாத்திரை விளக்கம் ஆதாரமற்றது. எனவே இதை விட்டு விடலாம்.

இரண்டாவதாக, நம்முடைய ஸௌராஷ்ட்ர விஜயாப்தம் என்று குறிப்பிடப்படும் ஆண்டு பற்றி ஆராய்வோம். இந்த 1312ம் ஆண்டு எதைப்பற்றி குறிப்பிடுகிறதென்று சபையினர் விளக்கவில்லை. ஆனால் திரு. கே. வி. பத்மனாபய்யர் அவர்கள், தாம் எழுதிய ஒரு புத்தகத்தில், நம் சமூகத்தினர் இந்த 1312ம் ஆண்டில் ஆந்திர

நகரின் எல்லைப் பிரதேசங்களில் குடியேறினர்களென்றும் ஆகவே இந்த ஆண்டு ஸௌராஷ்ட்ரர்கள் விஜயாப்தம் ஆண்டு என்று சொல்லப்படுகிறதென்றும் கூறியுள்ளார்.

தற்சமயம் நாங்கள் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வசித்து வருகிறோம் ஆகவே, ஒன்று, தமிழ்நாட்டில் நாம் குடியேறிய காலத்தை கணக்கிலெடுத்துக் கொண்டிருக்க வேண்டும் அல்லது முதன் முதலில் எப்பகுதியில் குடியேறினோமோ அதையாவது எடுத்துக் கொண்டிருக்க வேண்டும். இந்த இரண்டும் எந்தக் காலத்தில் நடந்தவையென்று தோராயமாகவும் நமக்குத் தெரியாது. இப்படியிருக்க ஆந்திர நாட்டில் குடியேறிய காலம் மட்டும் நாம் துல்லியமாக 1312ம் ஆண்டு என்று எப்படி தெரிந்து கொள்ள முடிந்தது. ஏன் இந்தக் காலத்தை நாம் கணக்கிலெடுத்துக் கொண்டோம்? மேலும் இந்த ஆண்டு ஏறக்குறைய விஜயநகர சாம்ராஜ்யத்தின் ஆரம்ப காலத்தை குறிப்பிடுவதாகயிருக்கிறதே யொழிய உண்மையில் நம்சமூகததினர் பற்றியதாக இல்லை (திரு ஜே.எஸ். வெங்கட்ராம சாஸ்திரி அவர்களால் 1915ம் ஆண்டில் எழுதப்பட்டதும் மதுரை பிரஹ்மவித்யாஸ்ரம சபையினரால் வெளியிடப்பட்டதுமான, "ஸ்ரீமத் ஸௌராஷ்ட்ர சரித்திர ஸங்கிரஹம்" எனும் புஸ்தகத்தில் விஜயநகர சாம்ராஜ்யம் ஸ்தாபிதம் ஆன ஆண்டு 1312 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் "1335ம் ஆண்டு விஜயநகர ராஜ்யம் ஸ்தாபிதமானது" என்று சரித்திரம் கூறுகிறது.) எனவே இந்த ஸௌராஷ்ட்ர விஜயாப்தம் ஆண்டு என்பது உண்மையில் நம் சமூகத்தினரின் வரலாறு பற்றியதல்ல வென்று நினைக்கத் தோன்றுகிறது.

மூன்ருவதாக, நம் வரலாறு பற்றி சிலர் கூறியுள்ள கருத்துக்களை ஆராய்வோம். இவைகளில் முக்கியமாக நான் படித்தவை (1) 'A history of the Sourashtras in Southern India' by The Sourashtra Literary Societies of Madura and Madras. (முதல் பதிப்பு 1891. இரண்டாவது பதிப்பு 1942ல் திரு கே. வி. பத்மனுபய்யர் அவர்களால் பிரகரிக்கப்பட்டுள்ளது) (2) "ஸ்ரீமத் ஸௌராஷ்ட்ர சரித ஸங்கிரஹம்" திரு கே. எஸ். வெங்கட்ராம சாஸ்திரியார் அவர்களால் 1915ம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்டு. மறு பதிப்பு மதுரை பிரஹமவித்யாஸ்ரம சபையினரால் 1971ல் பிரசுரிக்கப்பட்டுள்ளது. (3) திரு கு.வெ. பத்மநாபய்யர் அவர்களால் 1942ல் வெளியிடப்பட்ட "வெங்கட ஸூரி ஸ்வாமி சரித்திரம்" (இதில் நம்

சமூகத்தினர் பற்றிய வரலாறு கூறப்பட்டுள்ளது.) (4) 'The Saurashtran of South India' by Dr. H. N. Randle, London Published by Sri K. V. Padmanabaiyer in 1949. (5) "தமிழ் நாட்டில் ஸௌராஷ்ட்ரர் முழு வரலாறு. இது திரு கே. ஆர். சேதுராமன் அவர்களால் 1977ல் பிரசுரிக்கப்பட்டது.

மேற்கண்ட வரலாறு புஸ்தகங்கள் யாவும் பொதுவாக ஒரே நிகழ்ச்சியைத் தான் குறிப்பிடுகின்றன. இவைகள் சரியான ஆதாரங்களை எடுத்துக்காட்டவுமில்லை. எல்லாம் அனுமானங்களே. அவற்றுள் சொல்லப்பட்ட காலங்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமாக உள்ளன. இவற்றுள் சற்று விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது, சமீபத்திய திரு கே. ஆர். சேதுராமன் அவர்களின் புத்தகம். ஆகவே இவருடைய விளக்கங்களையே நாம் விவாதத்துக்கு எடுத்துக்கொண்டு மற்றவைகளை விட்டு விடுவோம்.

4. 'ஸௌராஷ்ட்ர' தேசமும் கஜினி முகமது படையெடுப்பும்.

இவர், தன்னுடைய புத்தகத்தில் கூறியிருப்பது; ஒரு காலத்தில் நம் சமூகத்தினர் ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து வெளியேறி (கி. பி. 1025ம் ஆண்டு கஜினி முகம்மது படையெடுப்பு காலம்) பின் 1187-91 ஆண்டுவாக்கில் தேவகிரியில் குடியேறியதாகவும், இதன் பின் கி. பி. 1294ல் அலாவுதீன் கில்ஜீயின் படையெடுப்பின் காரணமாக ஆந்திர நாட்டின் எல்லைப் பிரதேசங்களில் குடியேறியதாகவும் குறிப்பிட்டுள்ளார். தேவகிரி ராஜ்யத்தில் குடியேறுவதற்கு முன் நம் சமூகத்தினர் கி பி ஐந்தாம் நூற்றுண்டு முதல் பல இடங்களில் இருந்திருந்ததாகவும் சொல்கிறுர். இவர் இவ்விதம் சொல்வதற்குக் காரணம் 5ம் நூற்றுண்டிய, "மாண்டசோர்" கல்வெட்டு. இக்கல்வெட்டில் பட்டுநூல் நெசவாளர்கள் 'லாடா' என்னும் பகுதியிலிருந்து வெளியேறியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கல்வெட்டின் தகவல் அறிந்த சிலர், தம்முடைய விளக்கத்தில் சிறிது மாறுதல் செய்துள்ளனர். ஏனெனில் இதற்கு முன் எழுதியவர்கள் இக்கல்வெட்டைப் பற்றி பிரஸ்தாபிக்கவேயில்லை. மற்றெரு விசேஷம் என்னவெனில் இவர்கள் எல்லோரும் ஒருமுகமாக ஸௌராஷ்ட்ர தேசத்தைப் பற்றியும் அந்நாட்டு மக்களைப்பற்றியும் வெகுவாகப் புகழ்ந்து எழுதியுள்ளார்களேயொழிய அவர்களுக்கும் நம் சமூகத்தினருக்குமுள்ள சம்பந்தம் பற்றிய எவ்வித ஆதாரத்தையும் காட்டவில்லை.

மேற்சொன்ன தகவல்களைக் குறிப்பிட்ட யாவரும் கி. பி. 1850ம் ஆண்டுக்குப் பின், அதாவது, நாம் ''ஸௌராஷ்ட்ரர்', என்று பெயர் சூட்டப்பட்டபின் இக்கருத்தையே அடிப்படையாக வைத்துக் கொண்டும், சரித்திர நிகழ்ச்சிகளில் கண்டுள்ள முக்கிய பகுதிகளை வைத்துக் கொண்டும், யூகம் செய்திருக்கிறார்களேயொழிய சரியானபடி ஆராய்ந்து பார்க்கவில்லையென்று நினைக்கிறேன்.

நாம் தற்சமயம் பேசும் தாய்மொழியில் மராட்டிய வார்த்தைகளே மிகுதியாக உள்ளன. குஜராத்தி வார்த்தைகள் சிலவும் கலந்துள்ளன. இதை மேற்கண்ட ஆராய்ச்சியாளர் எல்லோரும் ஒப்புக் கொண்டுள்ளனர். ஆனால், யாரோ ஒருவர் நாம் பேசும் மொழி ''ஸௌராஷ்ட்ரம்'' என நினைத்துக் கொண்டு 'ஸௌராஷ்ட்ரர்' என்று பெயரிட, இதையே நம் சமூகத்தினர் ஏற்படுத்திய சபைக்கும் பெயரிட, நாம் ஸௌராஷ்ட்ர தேசத்தவர்களென்றே நம்பிக்கை ஏற்பட்டு இதற்குத் தகுந்தவாறு ஆதாரத்தைத் தேட முற்பட்டுள்ளனர் என்பது என் கருத்து.

5. பரம்பரை வார்சுகள்

மேற்கண்ட ஆராய்ச்சியாளர் எல்லோரும் 1025ம் ஆண்டு முதல் 1294ம் ஆண்டு வரை நமது பூர்வீக சமூகத்தினர் ஸௌராஷ்ட்ர தேசத்தில் இல்லை என்பதை ஒப்புக் கொள்கின்றனர். ஆகவே நாம் சுமார் 270 ஆண்டுகாலம் வடநாட்டில் ஏதோ ஒரு பகுதியில் (மகாராஷ்ட்ர ராஜ்யத்தில்) இருந்திருக்க வேண்டும் என்று உறுதியாகிறதல்லவா? இவ்விதம் சுமார் 300 ஆண்டு காலம் வரை மாற்றுப் பிரதேசத்தில் நாம் இருந்தோமென்றால், நாம் கட்டாயம் அத்தேசமக்களுடன் கலந்து ஒன்றாகியிருப்போம். 11, 12, 13ம் நூற்றாண்டுகளில் கல்வி அதிகமாகப் பரவியிராததாலும் போக்கு வரத்து சாதனங்களுமில்லாததாலும் நாம் தனித்தன்மையை காப்பாற்றிக் கொண்டிருக்க முடியாது. மேலும் சுமார் 300 ஆண்டு காலம் வரை, குடிபெயர்ந்த மக்கள் எல்லோரும் சேர்ந்து ஒன்றாக ஒரே கிராமத்திலோ அல்லது ஒரே நகரத்திலோ இருந்திருக்கவும் முடியாது. மக்கள் பல இடங்களுக்குச் சென்று குடியேறி இருப்பார்கள் தவிர இந்த இடைக் காலத்தில் குறைந்தது மூன்று அல்லது நான்கு மக்கள் பரம்பரையாவது மாறியிருக்கும். இப்படியிருக்க இதே மக்கள் படையெடுப்பின் காரணமாக மறுபடியும் வெளியேறினார்களென்றால் நம்பும்படியாக உள்ளதா? நம்

சமூகத்தினர் என்ன அவ்வளவு கோழைகளா ? அதுவும் பரம்பரை கோழைகளா ? படையெடுப்பு என்று சொன்னதும் ஊரை விட்டு வெளியேறுவதற்கு ?

மற்றொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். படையெடுப்பு காலங்களில் போர் வீரர்கள், அரச பரம்பரையினர், செல்வந்தர்கள் இவர்கள்தான் பாதிக்கப்படுவார்கள். நகரப்பகுதிகள்தான் தாக்கப்படும். நம் சமூகத்தினரோ தொழில் செய்யும் ஒரு சாதாரண மக்கள். ஆகவே இப்படையெடுப்புகள் சாதாரண மக்களை பாதித்திருக்கக் கூடுமென்றும், அதுவும் தேசத்தை விட்டு தேசம் செல்லும் அளவுக்கு பாதித்திருக்கக் கூடுமென்றும் நினைப்பதற்கில்லை. இது தவிர படையெடுப்பால் பாதிக்கப்படக் கூடிய சொந்த நாட்டு மக்கள் இருக்கமாட்டார்களா ? அவர்களெல்லாம் வெளியேறாத போது நம் சமூகத்தினர் மட்டும் ஏன் அடிக்கடி வெளியேற வேண்டும்? இதற்கான முகாந்திரங்களை யாரும் சொல்லவே இல்லை. ஆகையால் இவைகள் யாவும் ஆதாரமற்ற கற்பனைகளென்றும், நம் சமூகத்தினர் ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து வந்தவர்களென்பதை குறிப்பிடுவதற்காக சிருஷ்டிக்கப்பட்டதே தவிர, நம் சமூகத்தினர் பற்றிய உண்மைச் சம்பவமல்ல வென்றும் நினைக்கிறேன். இதுதவிர, படையெடுத்து வந்து தாக்கிய முகம்மதியர்கள் மேலும் தெற்குநோக்கியே சென்றிருக்க இம்மக்களும் தெற்குப் பகுதியான ஆந்திர நாட்டுக்கு வரவேண்டிய அவசியமென்ன ? 'எங்கு சென்றாலும் இந்த படையெடுப்புத் தொல்லை இருக்கத்தானே செய்கிறது ; ஆகவே நம் தேசமான ஸௌராஷ்ட்ரத்துக்கே நாம் போய் சேருவோம் என்று நினைக்கத் தோன்றாதா ?

6. தேவகிரியும் முகம்மதியர் படையெடுப்பும்

இதன் பின் 1294ம் ஆண்டில் தேவகிரி முகம்மதியர்களால் தாக்கபபட்டு அழிந்து விட்டதின் காரணமாக ஆந்திரயெல்லைப் பிரதேசமான ''கம்பிலி'' எனும் நகரத்தில் குடியேறியதாகவும், பின் அங்கிருந்து 60 ஆண்டுகள் கழித்து விஜய நகரத்துக்குச் சென்றதாகவும், ஆகவே இந்த ஆண்டு ஸௌராஷ்ட்ர விஜயாப்தம் என கணக்கிடப்படுவதாகவும் சொல்கிறார் திரு சேதுராமன் அவர்கள். மகாராஷ்ட்ர ராஜ்யத்திலிருந்து வெளியேறியது 1294. விஜய நகரத்தில் குடியேறியது 60 ஆண்டுகள் கழித்து. ஸௌராஷ்ட்ர விஜயாப்தம் கணக்கிடப்படுவது 1312 இதில் எந்த ஆண்டைப்பற்றி அவர் குறிப்பிடுகிறாரென்று தெளிவாக இல்லை.

7. தஞ்சையை நோக்கி விஜய நகர மக்கள்

விஜயநகரப் பகுதியில் மிகஅமைதியாக வசித்துக் கொண்டிருந்த மக்கள், திடீரென்று, (1532-80) ஆண்டில் விஜயநகரத்திலிருந்து, "கோவிந்த தீக்ஷிதர்" என்பவரால், 'சேவப்ப நாயக்கர்' என்பவர் தஞ்சையை ஆண்டு கொண்டிருந்த காலத்தில், தஞ்சைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்களென்றும், இதற்கு ஆதாரமாக, 'பட்டீசுவரம்' கல்வெட்டு காணப்படுவதாகவும் சொல்கிறார். விஜய நகரப் பேரரசில் உற்பத்தியான நெசவு ஆடைகள் சிறப்பாக இருந்ததாக சில ஐரோப்பியர்களால் புகழப்பட்டிருப்பதாகவும், இவர் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே நம் முன்னோர்கள் ஆந்திர நாட்டில் குடியேறினதற்கும் பின் தமிழ் நாட்டில் குடியேறினதற்கும் இவை சான்றுகளாக உள்ளன என்கிறார்.

இதே படையெடுப்புக் கதை தான் இங்கேயும் சொல்லப் பட்டுள்ளது. ஆனால் திரு. சேதுராமன் அவர்கள் சிறிது மாற்றம் செய்து சில ஆதாரங்களை தமக்குச் சாதகமாக எடுத்துக் கொள்ள முயற்சிக்கிறாரென்று நினைக்க வேண்டியிருக்கிறது. பொதுவாக நெசவாளர்களென்று கருதப்படுவதற்கு நம் சமூக மக்கள் ஒருவர் தான் இந்தியாவில் இருந்தார்களென்ற கருத்தில் அவர் கூறியிருக்கிறார். இது சரியல்லவென்று நினைக்கிறேன் ஒவ்வொரு தேசத்திலும் நம்மைப் போன்று நெசவாளர் வகுப்பினர் இருந்திருக்கிறார்கள். ஆகவே நெசவாளர்யென்றால் இதுநம் வகுப்பினரையே குறிப்பிடுவதாக நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது.

8. விஜயநகரத்தில் தங்கிய மக்கள்நிலை?

மேலும் 1312ம் ஆண்டு முதல் 1535ம் ஆண்டு வரை விஜயநகர சாம்ராஜ்யத்தில் அமைதியாக வாழ்ந்து வந்த மக்கள் திடீரென்று தமிழ்நாட்டிற்கு வரவேண்டிய அவசியமென்ன? அமைதியான வாழ்க்கையை புறக்கணித்து விட்டு தெற்கு நோக்கி எல்லா மக்களும் சென்று விட்டார்களென்று நினைக்கவும் முடியாது இது தவிர அந்த நாட்டில் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு மேல் வசித்துள்ள காரணத்தால் அங்கும் மூன்று தலைமுறை நிகழ்ந்திருக்கும். இவர்களும் தங்கள் வசதிக்கேற்ப பல பகுதிகளில் குடியேறியிருக்கலாம். ஆகவே அங்கிருந்த எல்லா மக்களும் தமிழ்நாட்டிற்கு வந்ததாகச் சொல்வது சரியல்ல. திருமலைநாயக்கர் காலத்தில்

எல்லோரும் அழைத்துக் கொள்ளப்பட்டார்களென்பதற்கு சான்றுகள் கிடைக்கவில்லையென்பதை திரு ஏ.ஜே. சாண்டர் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாக திரு சேதுராமன் அவர்களே தன் புஸ்தகத்தில் விளக்கியிருக்கிறார்கள்.

ஆகவே அங்கிருந்த எல்லா மக்களும் ஆந்திரப் பகுதியிலிருந்து வெளியேறவில்லையென்று நிச்சயமாகச் சொல்லலாம். இவ்விதம் எல்லா மக்களும் வெளியேறவில்லை என்பதை ஏற்றுக் கொண்டு பார்த்தால் ஒரு பகுதி மக்களாவது நம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அங்கே இருக்கத்தான் வேண்டும். அந்தக்காலத்தில் தமிழ்நாட்டில் குடியேறிய ஒரு பகுதி மக்கள் இன்று சுமார் நான்கு இலட்சம் மக்களாகப் பெருகியிருக்கிறார்கள் என்றால் அங்கு தங்கிய மக்களின் ஜனத்தொகை பெருகி இன்று ஒரு இலட்சம் மக்களாவது அவசியம் அங்கே இருக்க வேண்டுமல்லவா? இவ்விதம் நம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் ஆந்திராவில் இருப்பதாக எவ்வித கணக்கெடுப்பிலும் காணப்படவில்லை. ஆந்திராவில் நம் வகுப்பைச் சேர்ந்த மக்கள் தற்சமயம் அங்கிருக்கவில்லையென்றால் நாம் ஆந்திராவில் வாழ்ந்ததாகச் சொல்லும் யூகமும் சரியானதென்று நினைப்பதற்கில்லை.

9. பட்டீஸ்வரம் கல்வெட்டும் நெசவாளர்களும்

இதற்கடுத்தபடியாக, திரு சேதுராமன் அவர்கள் சொல்லும் கல்வெட்டைப் பற்றி ஆராய்வோம். இவர் இக்கல்வெட்டு எக்காலத்தியதென்று சரியாகக் குறிப்பிடவேயில்லை. சில நாணயங்களில் கோவிந்த தீக்ஷிதர் என்பவரின் உருவம் இருந்ததாகச் சொல்கிறார். ஆகவே இக்கல்வெட்டு இவருடைய காலத்தியது என்கிறார். சேவப்ப நாயக்கர் தஞ்சையை ஆண்ட காலம் 1538—60. ஏறக் குறைய இந்தக் காலத்தில் தான் நம் மக்கள் தமிழ்நாட்டுக்கு வந்ததாகச் சொல்கிறார். கல்வெட்டும் இதே காலம் என்று எடுத்துக் கொண்டால் "தஞ்சைக்கு வந்த நாங்கள் சில காலத்தில் அங்கிருந்து வெகு தூரத்திலுள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று முதல் தாம்பூல மரியாதை கோரி, அங்குள்ள மக்களுடன் கல்வெட்டில் வருமளவுக்கு, தகராறு செய்ய முடியுமா என்று ஆராயவேண்டும். ஆகவே இது சாத்தியமல்லவென்று நினைக்கிறேன். மேலும் கோவிந்த தீக்ஷிதர் என்பவர் "ஐயன்" என்று பிரியமாக அழைக்கப்பட்டதாகச் சொல்வதும் நம்புவதற்கில்லை. உண்மையில் "ஐயன்" என்று சொல்லப்பட்டவர் 1712—1728வது ஆண்டில் தஞ்சையை ஆண்ட சரபோஜி

மன்னரிடம் அமைச்சராக இருந்த ''அய்யாவய்யன்'' என்பவராக இருக்கலாம். எனவே இக்கல்வெட்டு 1532—60ம் வருடத்திய கல்வெட்டுதானு என்பதும் சந்தேகமாக உள்ளது. மேலும் அக்கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் யாரென்பதும் சரியானபடி புரிந்து கொள்ளவேண்டும். ஆந்திரப் பிரதேசமான ஓரங்கலலில், ருத்ரம்மா என்பவர் ஆட்சிகாலத்தில் (1260—91) இந்தியாவிற்கு யாத்திரை வந்த மார்கோபோலோ' என்பவர், ராணி ருத்ரம்மாள் ஆட்சி பற்றிய குறிப்பொன்றில், அந்நகரத்தில் தயாரிக்கப்பட்ட ஆடைகள் மிக நேர்த்தியாகவும், மெல்லியரகமாக வும் இருந்ததென எழுதியுள்ளார். இதன் மூலம் கைத்தறி நெசவாளர்கள் இந்திய தேசத்தின் எல்லா பகுதிகளிலும் இருந்திருக் கிறுர்களென்றும் ஆகவே கைத்தறி நெசவாளர்கள் ஒரு ஊரில் இருந்தார்களென்ருல் அது நம் சமூக மக்களேதான் என்று எடுத்துக் கொள்வது தவருகுமென்றும் நினைக்கிறேன்.

விசயநகர சாம்ராஜ்யம் கி. பி. 1336ம் ஆண்டு முதல் 1559 வரை, அதாவது கிருஷ்ண தேவராயர் காலம் வரை ஒரு சிறந்த ஹிந்து சாம்ராஜ்யமாகத் திகழ்ந்தது. கிருஷ்ணதேவராயர் காலத்துக்குப் பின் இவர்களின் அரச குடும்பத்தில் தகராறுகள் ஆரம்பித்துவிட்டன. 1565ம் ஆண்டு நடந்த தலைக்கோட்டை போரில் இராமராயர் கொல்லப்பட்டார். இத்துடன் விஜயநகர ராஜ்யம் சிதைந்துவிட்டது. தமிழ்நாட்டில் ஆந்திரர்களின் ஆட்சி மூன்று பிரிவாக இருந்தன. அவை செஞ்சி, தஞ்சை, மதுரை என்பனவாகும். இவர்கள் எல்லோரும் தலைக்கோட்டை போருக்குப் பின் விஜய நகரத்து தலைமை ஆட்சியை ஏற்காமல் தங்களுக்குள் விரோதத்தை வளர்த்துக் கொண்டார்கள். இவர்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிடும் நிலை நேரிட்டது. இவ்விதம் தமிழ்நாட்டுப் பகுதியில் அமைதியற்றிருந்த ஒரு காலத்தில், விஜய நகரத்தில் அமைதியாக வாழ்ந்து கொண்டிருந்த மக்கள் எல்லோரும் அழைத்துச் செல்லப்பட்டார்களென்று கூறுவதை எவ்விதத்தில் நம்பமுடியும்? ஒருக்கால், கோவிந்த தீக்ஷிதர் காலத்தில் தமிழ் நாட்டில் குடியேறிய மக்கள், தற்சமயம் இங்கு வசித்து வரும் தெலுங்கு பிராமணர்களாக இருக்கலாமேயொழிய நம்முடைய சமூகத்தவர் என்று கருதுவதற்கு இடமில்லை. ஆகவே நம் சமூகத் தவர் ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து வந்தார்கள் என்றும், இதன்

பின் தேவகிரியிலும், விஜயநகரராஜ்ஜியத்திலும் இருந்தார்களென்றும் நாம் நினைக்கும் அபிப்பிராயம் தவறென்று நினைக்கிறேன்.

10. தஞ்சையைக் கைப்பற்றிய மஹாராஷ்ட்ரர்கள்.

இவ்விதம் நம் பூர்வீக சமூக மக்கள் சௌராஷ்ட்ர தேசத்திலிருந்து வந்தவர்களல்லவென்றால் பின் நாம் எங்கிருந்து வந்தோம்? எப்படி வந்தோம்? எனும் பிரச்னை எழுகிறது. நம் சமூகத்தினர் "ஸௌராஷ்ட்ரர்" என அழைக்கப்படுவதற்குக் காரணமென்ன என்றும் ஆராய வேண்டியுள்ளது.

இந்தியநாட்டில் இன்று பல அன்னியர்கள் வசித்து வருகின்றனர். இதுபோன்று தமிழ் நாட்டில் ஆந்திரர்கள், கிறிஸ்துவர்கள், முகம்மதியர்கள் ஆகிய பல வகுப்பினர்களும் வசித்து வருகின்றனர், இவர்கள் தமிழ்நாட்டில் குடியேறி வசித்து வருவதற்கு முக்கிய காரணம் இவர்களுடைய சமூக மக்கள் தமிழ்நாட்டில் ஆட்சி புரிந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறதல்லவா? மிகுதியான ஆந்திரர்கள் தமிழ்நாட்டில் வசித்து வருவதின்காரணம் ஆந்திரர்கள் சமீப காலம் வரை, அதிக காலம் ஆட்சிசெய்தது தான் என்பது நன்றாகத் தெரிகிறது. ஆகவே நம் சமூக மக்கள் தமிழ்நாட்டில் குடியேறிவசித்து வருவதற்கு காரணம் இந்நாட்டில் நம்சமூக மக்களின் ஆட்சி நடைபெற்றிருக்குமென நாம் ஏன் நினைக்கக் கூடாது? ஆம், உண்மையில் தமிழ்நாட்டில் ஆட்சி நடத்தியுள்ளனர். (நாம் மகாராஷ்ட்ர சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது என் கருத்து.) தமிழ்நாட்டின் தஞ்சாவூர் பகுதியில், 1675ம் ஆண்டில் மகாராஷ்ட்ர மன்னரான வெங்கோஜி என்பவர் நாயக்க மன்னர்களிடமிருந்து ஆட்சியை கைப்பற்றிய பின் 1850ம் ஆண்டு வரை, இவரும் இவருடைய வாரிசுகளும் ஆண்டு வந்திருக்கின்றனர். வெங்கோஜி என்பவர் பிரசித்தி பெற்ற சிவாஜி மன்னரின் மாற்றாந் தாய்க்குப் பிறந்தவர் என்று சொல்லப்படுகிறது. இதன் பிறகு சிவாஜி 1677ம் ஆண்டில் செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றியதுடன் தஞ்சையையும் தனது வசமாக்கிக் கொள்ள முயற்சித்தார். இதற்குள் வடக்கில் மொகலாயர்களின் படையை தடுத்து நிறுத்துவதற்காக அவர் வடக்கே போக நேரிட்டது. பின் சிவாஜி 1880ல் காலமானார். இவர் காலமானதும் செஞ்சியை ஆண்ட மராட்டிய மன்னரும் தஞ்சையை ஆண்ட வெங்கோஜி என்பவரும் சமரசம்

செய்து கொண்டனர். ஆகவே நாம், தஞ்சையை ஆண்ட மகாராஷ்ட்ர வகுப்பினரைச் சேர்ந்தவர்களென்றும் அவர் படையெடுத்து வந்த காலத்தில் அவருடன் சேர்ந்து தமிழ் நாட்டிற்கு வந்தவர்களென்றும் ஏன் கருதக்கூடாது? நம் 'சமூக மக்கள் கைத்தறி ஆடை தயாரிப்பதில் வல்லுநர்களாக இருந்ததுடன் நாடகக்கலையிலும் வல்லவர்களாக இருந்திருப்பரெனத் தெரிகிறது. நம் சமூக மக்களில் நெசவாளர்கள் இன்றைக்கும் நாடகங்கள் நடத்துவதிலிருந்து நாம் இதை உணரலாம். எனவே நம் சமூக மக்கள் படையெடுப்பு காலங்களில் படையெடுப்பு நடத்தும் மக்களுடன் சேர்ந்து படையெடுக்கப்படும் தேசங்களுக்குச் சென்றிருக்கக் கூடும். இவ்விதம் மகாராஷ்ட்ரர்களுடன் தஞ்சைக்கு வந்தவர்களே நம் சமூக மக்கள் என்பது தெளிவாக விளங்குகிறது.

இக்காலத்தில் மதுரையை ஆண்டு கொண்டிருந்தவர் சொக்கநாத நாயக்கர். (ராணி மங்கம்மாளின் கணவர்). இவர் தஞ்சை நாயக்க மன்னர், தனக்கு பெண் தர மறுத்து விட்டார் என்பதற்காக, தஞ்சை நாயக்கர் மீது படையெடுத்துச் சென்று அவரைக் கொன்று விட்டார்: தஞ்சை நாயக்கருக்கு வாரிசாக இருந்த செங்கமலதாஸ் என்பவரை பதவியிலமர்த்த எண்ணிய அமைச்சர் வெங்கண்ணா பீஜப்பூர் சுல்தான் உதவியை நாட, சுல்தான் தனது மராட்டிய தளபதியான வெங்கோஜியை தஞ்சைக்கு அனுப்பினார். தஞ்சையை கைப்பற்றிய வெங்கோஜி செங்கமலதாஸ் என்பவரை பதவியிலமர்த்த, அவர் தன் மந்திரி வெங்கண்ணாவின் சூதை அறிந்து வெங்கோஜியிடமே ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்து விட்டு மறைந்துவிட்டார். இவ்விதம் தஞ்சை அரசாட்சியை கைப்பற்றிய மராட்டியர் 1855ம் ஆண்டு 'டல்ஹௌசி' காலம்வரை சுமார் 150 ஆண்டுகளுக்கும் அதிகமாக ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள். நாம், இவர்கள் தஞ்சைக்கு வந்த காலத்தில் இவர்களுடன் வந்திருக்கக் கூடும். இவர்கள் அதிகமாக வடமொழி, தமிழ் தெலுங்கு ஆகிய மொழிகளை ஆதரித்து வந்துள்ளனர்.

தஞ்சையை கைப்பற்றிய இவர்கள் மற்ற மஹாராஷ்டிர தேசத்தவர்களுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. 1680ம் ஆண்டில் திறமை மிக்க சிவாஜி இறந்தவுடன் மொகலாயர்கள் தெற்கு நோக்கி வந்து, பீஜப்பூர், கோல்கொண்டா பகுதிகளை கைப்பற்றியதுடன், மொகலாயப்படை தளபதி "சுல்பிகர்கான்" என்பவர் 1698ம் ஆண்டு செஞ்சிக்கோட்டையும் கைப்பற்றினர். தஞ்சை

மராட்டிய மன்னரும் இராணி மங்கம்மாளும் பெருந்தொகை கொடுத்து இவர்களுடன் சமரசம் செய்து கொண்டனர். மேலும் இவர்கள் மொகலாயப் பேரரசுக்கு கப்பம் செலுத்தவும் ஒப்புக் கொண்டனர். பிற்காலத்தில், சுல்பிகர்கானுக்குப் பிறகு வந்த நவாப் செஞ்சிக்கோட்டையின் தலைமைப் பதவியை இராஜபுத்திர தளபதி "சருப்சிங்" என்பவரிடம் ஒப்படைத்தார். தலைமைப்பதவி கிடைத்ததும் இவர் மொகலாயர்களை மதிக்கவில்லை. அவர்களுக்கு கப்பம் செலுத்தவும் இல்லை. இவருடைய மகன்தான் தமிழ் நாட்டின் வரலாறுகளில் பிரசித்தமான "ராஜாதேசிங்கு". இவ்விதம் தஞ்சைக்கு வந்தவர்கள் "ராணிமங்கம்மாள்" காலத்தில் மதுரையை வந்து அடைந்தனர். நெசவு ஆடைகள் தயாரிப்பதில், நம் சமூகத்தினர் திறமையை அறிந்த ராணிமங்கம்மாள் தஞ்சை மன்னரிடமிருந்து (இவர் பெண்பாலராக இருப்பதால் பட்டு நூல் சேலை அணிவதில் இவருக்கு எவ்வளவு விருப்பம் இருந்திருக்கு மென்பதை நாம் தெரிந்து கொள்ளலாம்) நம்முடைய வகுப்பினரை அழைத்துக் கொண்டிருக்கிறார். அக்காலத்தில் ராணிமங்கம்மாள் அரசே பெரும் ராஜ்யமாகவும் புகழ் வாய்ந்ததாகவும் இருந்தது. இவருடைய தளபதி நரசப்பய்யா என்பவர் தஞ்சாவூர் மன்னர் மீது படையெடுத்துச் சென்று பின் சமரசம் செய்து கொண்டார். அப்போது தஞ்சைப்பகுதி சிறு ராஜ்யமாகத் தான் இருந்தது. இதனால் தான் நம் சமூக மக்கள் மதுரையில் பெரும் பகுதியாக வாழ்கின்றனர். தஞ்சாவூர் மகாராஷ்ட்ர மன்னரிட மிருந்து தான் திப்பு சுல்தான் சில நெசவாளர்களை (நம் சமூக மக்களை) அழைத்துக்கொண்டு பெங்களூரில் குடி அமரச் செய்திருக்கிறார். திப்பு சுல்த்தான் நம் சமூக மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற் காகக் கொடுத்த சாதனங்கள் இன்றும் இருப்பதாகத் தெரிகிறது. (ஆதாரம் தினமணி கதிர் 7-3-80உ இதழ்)பொதுவாக மஹாராஷ்ட்ர மக்கள் தங்கள் ஊர் பெயருடன் 'கர்' சேர்த்து 'ஹூப்ளிகர்' 'பெல்காம்கர்' 'மாலவண்கர்' 'பண்டாரகர்' 'ஹோல்கர்' என்று குறிப்பிடுவதுண்டு. இவற்றுள் 'ஹூப்ளி, பெல்காம் 'மாலவண்' என்பவை ஊர்களாகும். நம் சமூக மக்கள் 'பள்கார்' என்று குறிப் பிடப்படுவது எல்லோரும் அறிந்ததே. எனவே 'பள்கார்' என்பது திரிபு அடைந்த ஒரு வார்த்தையாக இருக்கலாம் என்றும், இது நாம் மஹாராஷ்ட்ர சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதை குறிப்பிடுவ தாகவும் உள்ளதென்றும் கருதலாம்.

11. நம் சமூகத்தினர் படையெடுப்புக்கஞ்சி ஓடுபவர்களல்ல

இதன் பின் 17ம் நூற்ருண்டு முதல் ஆங்கிலேயர் வசம் ஆட்சி மாறும் வரை தமிழ்நாட்டில் கலவரங்களும், சண்டைகளும் நிகழ்ந்து கொண்டேயே இருந்தன. 1656ல் மூக்கறுப்புப் போர் நடந்துள்ளது இவ்வளவு கலவரங்கள் நடந்தும் தமிழ்நாட்டிற்கு வந்த நம் சமூகத்தினர் வேறு பகுதிகளுக்குக் குடியேறவில்லை என்பதை நாம் முக்கியமாக ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இதிலிருந்தே ஆரம்பத்தில் நம்முடைய சரித்திர ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிட்டது போல் படையெடுப்பு என்றதும் நம் மக்கள் ஊரை விட்டு ஓடக்கூடியவர்களல்ல வென்றும் தெளிவாக விளங்குவதுடன் மேற்கண்ட வரலாற்றுக் கதைகளும் கற்பனையென்றே நினைக்க வேண்டியுள்ளது.

12. மராட்டிய மொழியும் குஜராத்தி மொழியும்

நாம் தற்சமயம் பேசும் மொழி மராட்டி மொழியின் திரிபு சானேயொழிய சௌராஷ்ட்ர மொழியான குஜராத்தி மொழியல்ல. இதை திரு. ராண்டில் அவர்களும் குறிப்பிட்டுள்ளார்கள். திரு சேதுராமன் அவர்களும், தன் வரலாறு புத்தகத்தில், மகராஷ்ட்ர மொழி நாம் பேசும் மொழியில் மிகுதியாக இருப்பதை ஒப்புக் கொண்டுள்ளார்கள். மற்றும் பல மொழி ஆராய்ச்சியாளர்களும் இதை ஒப்புக்கொள்கிருர்கள். 'மராத்திய மொழியின் கிளை அல்லது திரிபு மொழிதான், தமிழ்நாட்டிலுள்ள நம் சமூகத்தினர் பேசும் மொழி' என்று மகாராஷ்ட்ர மொழி ஆராய்ச்சியாளர்களான திரு. கார்வே அவர்களும், திரு சிஞ்சில்கர் அவர்களும் கூறியிருக்கிருர்கள். மராத்திய மாத இதழான "ப்ரஸாத்" என்ற பத்திரிகை இவ்வாறு வெளியிட்டிருப்பதாக திரு சேதுராமன் அவர்களே தனது வரலாற்றுப் புத்தகத்தில் எழுதியிருக்கிருர்கள். இன்றும் மொழி ஆராய்ச்சியாளர் யாவரும் இதை ஒப்புக்கொள்கிருர்கள். நாம் பேசும் மொழி ஒன்றே நாம் மஹாராஷ்ட்ர சமூகத்தைச் சேர்ந்தவர் களென்றும், அப்பிரதேசத்திலிருந்து வந்தவர்களாக இருக்கக் கூடுமென்றும் மெய்ப்பிப்பதற்குப் போதுமான ஆதாரம் என்று நினைக்கிறேன். மேலும் நம்முடைய பழக்க வழக்கங்களும் மராட்டியர்களின் பழக்க வழக்கங்களை ஒத்திருக்கிறது. நம் சமூக மாதர்கள் கச்சம் கட்டுவது மராட்டியர்களின் பழக்கம் தான். ஆனல் குஜராத்திய (ஸௌராஷ்ட்ர தேசத்து) மக்களோ வலது பக்கத்தில் முந்தானை போடுகிருர்கள். இப்பழக்கம் நம் சமூக

பாதர்களிடம் இல்லை. இது தவிர நம் சமூக மக்களும் மகாராஷ்ட்ர்களைப் போன்று சுயமாகவும் அமைதியாகவும் வாழ்க்கை நடத்த விரும்புகிறார்களேயொழிய ஸௌராஷ்ட்ர தேசத்தவர்களைப் போன்று வியாபார நோக்கம் படைத்தவர்களாக இருக்கவில்லை.

13. இனம் இனத்தோடு சேரும்

இது தவிர நம் சமுகத்தின் வர கவியான வெங்கடஸூரி அவர்களைப் போற்றி, சன்மானமும், பரிசுகளும் வழங்கிய மன்னர் தஞ்சை மஹாராஷ்ட்ர மன்னர் தான். இம் மன்னரும் நாம் பேசும் மொழி மகாராஷ்ட்ர மொழியை ஒத்துள்ளது என்று குறிப்பிட்டிருப்பதாக, திரு பத்மனுபய்யர் அவர்கள் தங்கள் புத்தகத்தில் கூறியிருக்கிறார்கள். இன்று வரைக்கும் நம்சமுக மக்கள் உற்பத்தி செய்து வரும் கைத்தறி ஆடைகளை மிகுதியாக வாங்கி உபயோகித்து நம் சமுகத்தின் பெரும்பான்மை மக்களை ஆதரித்து வந்திருப்பவர்களும் மகாராஷ்ட்ரர்கள் தான். இவை "இனம் இனத்தோடு சேரும்" எனும் பழமொழிக்கேற்ப இருக்கிறதல்லவா?

14. நாம் பிறந்த இடத்தை நாம் அறிவோமா?

நம் சமூகத்தவர் இப்போது மதுரை, பரமக்குடி, திண்டுக்கல் பாளையங்கோட்டை, திருச்சி, கோட்டார் முதலிய நகரங்களில் வசித்து வருகிறார்கள். இவர்கள் பேசும் பாணியிலிருந்து இவர்கள் இன்ன ஊர்காரர்களென்று நம் சமூகத்தவர் குறிப்பிட முடியும். மாற்று மொழி பேசுபவர்கள் இதை அறிந்து கொள்ள முடியாது. பொதுவாக மொழியை வைத்தே நாம் இன்னாரின்னார், இன்ன ஊர் காரர்களென்று குறிப்பிட முடிகிறதல்லவா? இது போல் நாம் பொதுவாக பேசும் மொழியை வைத்து நாம் இன்ன ஊரைச் சேர்ந்தவர்களாக இருக்கமுடியும் என்று தீர்மானிக்கலாமல்லவா? நாம் தற்சமயம் பேசும் மொழி மகாராஷ்ட்ர மொழியை ஒத்திருக்கிறதென்பதை பெரும்பான்மையினர் ஒப்புக் கொள்கின்றனர். நம் மொழி ஸௌராஷ்ட்ர மொழியை ஒத்து இல்லை. இதற்கு மாறாக சிலர் நம்முடைய மொழியே ஆதிகாலத்து ஸௌராஷ்ட்ர மொழி என்றும், இதை ஸௌராஷ்ட்ர தேசத்தவர்களே பேசுவதில்லையென்றும் கூறுகின்றனர். நியாயமான வாதங்கள் தக்க ஆதாரங்களின்மூலம் திருத்திக் கொள்ள முடியும். ஆனால் பிடிவாதங்களைச் சரி செய்ய முடியாது,

எனவே நாம் மகாராஷ்ட்ர சமூகத்தைச் சேர்ந்தவர்களென்று நிரூபணம் செய்ய நம்முடைய மொழி மூலாதாரமாக இருக்க, நம் சமூகத்தினர் ஸௌராஷ்ட்ரர்கள் என்று எவ்விதம் அழைக்கப் படலானார்களென்பது ஒரு புதிராக உள்ளது; ஆகவே இதுபற்றி சிறிது சிந்திப்போம்.

நான் மதுரையில் தான் பிறந்தேன். நம் குடும்பத்தினருக்கு சொந்த வீடு கிடையாது. தங்கள் சௌகரியம் போல் அடிக்கடி குடி மாறுவோம். இந்நிலையில் நான் எந்த வீட்டில் பிறந்தேன் என்று எனக்குத் தெரியாது. ஆனால் பிறர், நான் லெக்ஷிமிபுரம் 4வது தெருவிலுள்ள ஒரு வீட்டில் பிறந்ததாகச் சொல்வார்கள். பிறர் சொல்வதையே நான் நம்பியுள்ளேன், ஆனால் நிச்சயமாக நான் எந்த விட்டில் பிறந்தேனென்று எனக்கு நினைவில்லை. நான் பிறர்த இடமே எனக்குத் தெரியாத போது என் தகப்பனார், பாட்டனார், தகப்பனாருக்குப் பாட்டனார் இவர்கள் எந்த ஊரில் பிறந்தார்களென்று என்னால் எப்படிச் சொல்ல முடியும். ஒருக்கால் பரம்பரை, பரம்பரையாக சொந்த வீட்டிலிருந்தால் தெரிந்து கொள்ள முடியும். இவ்விதம் ஒரு தலைமுறை பற்றியே நமக்குச் சரியாக சொல்லத் தெரியவில்லையென்றால் நூறு வருடங்களுக்கு முந்திய தலைமுறையினர் பற்றியும் அதற்கு முன் ஆந்திர நாட்டில் குடியிருந்த தலைமுறையினர் பற்றியும் அதற்கும் 300 வருடங்களுக்கு முன் தேவகிரியிலிருந்த தலைமுறையினர் பற்றியும் நாம் எவ்வாறு அறிய முடியும்? அவர்களைப் பற்றிய தகவல்கள் தனக்குத் தெரியும் என்று சொன்னாலும் இதை நம்ப முடியுமா? இவ்விதமிருக்க நம் மூதாதையர் ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து தான் வந்தார்களென்று சொன்னால் அதை நாம் நம்பிவிடுவதா?

சுமார் 100 ஆண்டுகளுக்கு முன் நமது பிராந்தியத்தில் பிராமண வகுப்பினரைத் தவிர மற்ற வகுப்பினர் ஆங்கிலக் கல்வி அறிவு குறைந்தவர்களாகவும் செல்வாக்கற்றவர்களாகவும் இருந்தனர். நம் சமூகத்தவர் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தனர். மேலும் நாம் 'பட்டுநூல்காரர்கள்'' என்றே அழைக்கப் பட்டு வந்துள்ளோம். இது சமயம் நமக்கு யாரோ 'ஸௌராஷ்ட்ரர்கள்' என்று பெயரிட அது நம் மக்கள் மனதில், ''வரண்ட பிரதேசத்தில் மழை பெய்தது போல்'' ஆழமாகப் பதிந்து விட்டது. மக்கள் தங்களை ''பட்டுநூல்காரர்கள்' என்று அழைப்பதை விட 'ஸௌராஷ்ட்ரர்' என்றழைத்தது நமக்குத்

திருப்தியாக இருந்தது. இவ்வாறு நமக்கு ஸௌராஷ்ட்ரர் பட்டம் அளித்தவர், நாம் பேசும் மொழியை தவறுதலாக, 'ஸௌராஷ்ட்ர மொழி' என நினைத்துக் கொண்டு தான் சொல்லியிருப்பாரே யொழியஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து வந்ததற்கான ஆதாரத்தை வைத்துக் கொண்டு சொல்லியிருக்க மாட்டார். மேலும் அந்தக் காலத்தில் சரித்திர ஆதாரங்கள் சரியானபடி தெரிந்துகொள்ளப் படவில்லை. நம்பிரதேசத்துக்கு அடுத்தபடியாக பம்பாய் மாகாணம் தான் இருந்தது. இது ஸௌராஷ்ட்ரமும், மஹாராஷ்ட்ரமும் சேர்ந்து பம்பாய் என்று சொல்லப்பட்டது. அப்போது நாம் பேசும் மொழி மஹாராஷ்ட்ர மொழியின் திரிபு என்பதை நம் முன்னோர் அறியவில்லை. இதன் பின் நமது மக்கள் கொஞ்சம் ஆங்கில அறிவு பெறவும், நம்முடைய வரலாறு பற்றி அறியவும் முயற்ச்சிக்க ஆரம்பித்தனர். இச்சமயம் இவர்கள் மனதிலும் 'சௌராஷ்ட்ரர்' எனும் எண்ணம் ஆழமாக இருந்ததால் சரித்திரத்தின் பிரசித்தமான கஜினி முசம்மதுவின் சோமநாத் படையெடுப்பை நம்முடைய சரித்திரத் துடன் இணைத்தனர். பின் இதுவே வளர்ச்சியடைந்து ஸௌராஷ்ட்ர தேசத்துடன் தொடர்பு கொள்ள பலஆதாரங்களைத் தேடலாயினர்.

15. பாய்கா^{2} ஞ கித^{3} ர் ஹை ?

நம்முடைய சமூகத்தவர் மாற்று தேசத்திலிருந்து வந்தவர்கள். தமிழ்நாட்டின் எந்தப் பகுதியில் முதன் முதலாகக் குடியேறினர் ? அப்படி வந்தவர்கள் நமக்கு என்ன உறவு வேண்டும் ? பின் அங்கிருந்து எந்தப் பகுதிக்கு குடிபோயினர்? ஏன் போயினர்? இந்தக் கேள்விகளுக்கு இன்று யாராவது பதில் சொல்ல முடியுமா ? இதை திரு. சேதுராமன் போன்றவர்களோ, அல்லது என்னைப் போன்றவர் களோ சொல்லத்தான் தெரிகிறது. இப்படிச் சிலர் சொல்வதையே மக்கள் நம்புகிறார்கள். ஒருவர் சொன்னதையே பல தடவை திரும்பத் திரும்பச் சொன்னால் அதுவே சரியானதென்று மக்கள் நம்புகிறார்கள். இவ்விதம் பலர் சொல்வதிலும் தவறுகள் இருக்கக் கூடும் என்பதுதான் என்னுடைய கருத்து. இதற்கு உதாரணமாக ஒரு சம்பவத்தைச் சொல்கிறேன். ஒரு சமயம் நான் வெளியூர் சென்றிருந்தேன். பஸ் ஒரு ஊரில், பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தது. இரு போர்ட்டர்கள் பஸ் அருகில் நின்று பேசிக் கொண்டிருந்தனர். காலை நேரம் ஒரு வடநாட்டுக்காரர் அவசரமாக வந்து அந்தப் போர்ட்டர்களிடம் ''பாய்கா^{2} ஞகித^{3}ர் ஹை'' என்றார்

அதற்கு ஒரு போர்டர் "பா³ ஹர் ஹை; பா³ ஹர் ஜாவ்" என்றார். உடனே அந்த வடநாட்டுக்காரர் பேருந்து நிலையத்திற்கு வெளியில் சென்று விட்டார் இவர் போன பின் அடுத்த போர்டர் பதில் சொன்ன போர்டரிடம் கேட்டார். "அந்த வடநாட்டுக்காரன் என்ன கேட்டான்? நீ என்ன பதில் சொன்னாய்? உடனே அவன் வெளியில் போய்விட்டானே". அதற்கு முதல் போர்டர் சொன்ன பதில், "கா²ன" என்றால் சாப்பிடுவது "பாய்" என்றால் ஏதோ சாப்பிடும் ஒன்றை குறிப்பிடுகிறான் போலிருக்கிறது. ஹோட்டல் வெளியிலிருப்பதால் வெளியே போகச் சொல்லி விட்டேன்; இவ்வளவு தான்" என்றார். இதைக்கேட்ட மற்றொரு போர்டருக்கு திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. தன்னுடைய நண்பருக்கு ஹிந்தி தெரிந்திருப்பது பற்றி மிக்க சந்தோசமடைந்தார். ஆனால் இதைக் கேட்டுக் கொண்டிருந்த எனக்கு மனது வேதனைப்பட்டது. முதலில் அவர் விளக்கம் சொல்லாத வரை, நான் இதுபற்றி ஒன்றும் நினைக்கவில்லை. அதை அப்போதே மறந்திருப்பேன். அவர் விளக்கம் சொன்னது தான் இன்று வரை என்னால் மறக்கமுடியவில்லை இதிலுள்ள சாராம்சம் என்னவென்றால், "பாய்கா²ன" என்ற ஹிந்தி வார்த்தை "கக்கூஸ்" என்பதைக் குறிக்கிறது. அந்த வடநாட்டுக்காரர் 'மூத்திரப் பிறை எங்கே' என்று தான் கேட்டார். இதன் முழு அர்த்தம் தெரியாத அந்தப் போர்டர் தனக்குத் தெரியாதென்று சொல்லியிருக்கலாம். ஆனால் அவருக்கு ஹிந்தி தெரிந்துள்ளது. இந்த வார்த்தையின் அர்த்தம் தான் புரியவில்லை. ஆகவே தனக்குத் தெரிந்தவரை கற்பனை செய்து கொண்டு பதில் சொன்னார், இதை புரிந்து கொள்ளாத வடநாட்டுக்காரரும், மற்றொரு நண்பரும் நம்பினார்கள். இதுபோன்ற அறியாத நம்பிக்கைகள் உலகத்தில் இன்றும் ஏராளமாக உள்ளன. இந் நம்பிக்கைகள் ஒவ்வொரு காலங்களில் திருத்திக் கொள்ளப்படுகின்றன. இதைப் போன்று தான் நம் வகுப்பினர் 'ஸௌராஷ்ட்ரர்கள்" என்று அழைக்கப்படுவதின் காரணமென்று நினைக்கிறேன்.

16. தமிழ்நாட்டில் நம் சமூகத்தவர் பற்றிய முதல் சான்று.

முதன் முதலில் நம் சமூகத்தினர் தமிழ்நாட்டில் இருந்ததை அறிவிப்பது ராணி மங்கம்மாவின் பட்டயம். இராணி மங்கம்மாவின் காலம் 1689 - 1706. ஆகவே நாம் ஏறக்குறைய இந்த சமயத்தில் தமிழ்நாட்டிற்கு அதுவும் மதுரைக்கு வந்து விட்டோமென்று நிச்சயமாக நம்பலாம். இந்தச் சான்றின் மூலம் நாம்

இன்னொன்றையும் தெரிந்து கொள்ள வேண்டும். அதாவது ஏறக் குறைய இக்காலத்திற்கு சில ஆண்டுகள் முன் தான் மதுரைக்கு வந்தோமென்பதையும் அதிக காலத்துக்கு முன் வரவில்லை யென் பதையும் இது அறிவுறுத்துகிறது. ஏனெனில் ஒரு பொறுமையுள்ள மனம் வெகுநாள் வரை தாங்கிக் கொண்டிருக்காது. நம்முடைய சமூகத்தவர்கள் பிராமண ஆசாரங்களைக் கடைப்பிடித்து வந்தார் களென்பது வெளிப்படை. இது ஏற்கனவே இந்நாட்டிலிருந்த பிராமணர்களுக்குப் பிடிக்கவில்லையென்பதும் இந்தப் பட்டயத்தின் மூலம் தெரிகிறது. நாம் இந்தக் காலத்திற்கு முன் அதாவது 100 ஆண்டுகளுக்கு முன் தமிழ்நாட்டில் இருந்திருந்தோமென்றால் இச் சம்பவம் ஏற்கனவே நடந்திருக்கும். அல்லது வேறு மன்னர் யாராவது இதைக் குறிப்பிட்டிருந்தால் ராணி மங்கம்மாவின் தீர்ப்பிலும் இது கூறப்பட்டிருந்திருக்கும். தவிர 100 ஆண்டுகளுக்கு மேலாக ஒருவர் கடைப்பிடித்து வந்த சம்பிரதாயத்தை, திடீ ரென்று நிறுத்தும்படி கோரவும் முடியாது. ஆகவே ராணி மங்கம்மாவின் பட்டயத்தின் மூலம் நாங்கள் தமிழ்நாட்டிற்கு வந்த ஆண்டு ஏறக்குறைய அவர் அரசாண்ட காலத்திற்கு சிறிது முன்னால் தான் இருக்க வேண்டுமென்று நாம் தீர்மானிக்கலாம். மேலும் இந்தப் பட்டயத்தில் நம் சமூகத்தவர் 'பட்டவாயர்' என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறார்களே யொழிய நாம் ஆந்திர நாட்டிலிருந்து வந்தவர்களோ அல்லது ஸௌராஷ்ட்ர தேசத்தைச் சேர்ந்தவர்களோ என்பதற்கு யாதொரு குறிப்பும் இல்லை.

17. நூறு ஆண்டு இடைவெளியும் மறதியும்

ராணி மங்கம்மாள் ஆட்சிக்குப்பின் ஆங்கிலேயர் ஆட்சி ஏற்படும் வரை அதாவது 1706 முதல் 1855 வரை தமிழ்நாட்டின் பகுதி ஒரு இருண்ட காலமாகவே இருந்ததென்று சொல்லவேண்டும். ராணி மங்கம்மாவின் மரணமும் துன்பம் நிறைந்ததாகவே இருந்தது. இவருக்குப் பின் இவருடைய பேரனும், பின் இப்பேரனுடைய வாழ்க்கைத் துணைவி மீனாட்சி என்பவரும் சிறிது காலம் மதுரையை ஆண்டார்கள். 1738ல் ஆற்காட்டு நவாப், சந்தாசாகிப், ராணி மீனாட்சிக்கு உதவி செய்வதாக நம்ப வைத்து, மதுரை ஆட்சியைக் கைபற்றிக் கொண்டார். தஞ்சை மராட்டிய மன்னர்கள் தங்களின் இனத்தவர்களான மற்ற மஹாராஷ்ட்ரர் களுடன் தொடர்பு கொள்ளாமல் தனியாகவே இருந்தனர். தஞ்சை மன்னர் ஒரு குறுநில மன்னராக விளங்கினாரேயொழிய தனது ராஜ்யத்தை விஸ்தரிக்க முடியவில்லை. தன் தாய் நாட்டுடன்

மகாராஷ்ட்ர அரசர்கள் தொடர்பு கொள்ளாததால் இவர்கள் வடமொழி, தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளுக்கும் ஆதரவு தந்தனர். அரசரே தங்கள் தாய் நாட்டுடன் தொடர்பு கொள்ளாத பொழுது அவருடன் வந்த மக்களாகிய நம் முன்னோர் எப்படி தன் தாய் நாட்டுடன் தொடர்பு கொண்டிருக்க முடியும்? எனவே நம்முடைய முன்னோர்கள் தமிழ்நாட்டில் மதுரை முதலிய பிற நகரங்களுக்குச் சென்று தஞ்சை அரசு மக்களான தன் சொந்த இனத்தவருடனும் தொர்டர்பு ஏற்படுத்திக் கொள்ள முடியாமல் தங்கள் வரலாறு முழுவதையும் மறந்தனர்.

இதன் பின் ஆங்கிலேயர் ஆட்சியில் தான் நாட்டில் அமைதி நிலவியது. 1850ம் ஆண்டுக்குப் பின் தான் மக்கள் தங்கள் உரிமைகளைக் கோர சங்கங்கள் வைத்துக் கொள்ள ஆரம்பித்தனர். பல மொழிகளில் இலக்கியங்கள் தோன்ற ஆரம்பித்தன. ஆங்கிலேயர்களுக்கு முன் தமிழ் நாட்டில் சாதாரணமாக தெலுங்கு மொழி தான் அரசாங்க உத்திரவுகளில் உபயோகப்பட்டு வந்ததாகத் தெரிகிறது. ஆகவே நம் மக்களும் தெலுங்கு மொழியை கற்றறிருந்திருந்தனர். (தெலுங்கு மொழி தெரிந்திருந்த காரணத்தால் நம் முன்னோர் விசய நகரத்தில் வாழ்ந்ததாகச் சொல்வது தவறாகும்) வேங்கட ஸூரி சுவாமிகள் தாம் இயற்றிய புஸ்தகங்களை தெலுங்கு மொழியில் எழுதியிருக்கிறார். இவர் அநேகமாக மராட்டிய மொழிப் புத்தகங்களைப் பார்த்தே அவைகளை தெலுங்கில் எழுதியிருக்கிறார். தற்சமயம் சிலர் பிரசாரம் செய்யும் லிபியை அவர் உபயோகப்படுத்தவில்லை. இவரிடம் ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீநிவாச தாத்தாச்சாரியார் என்பவரும், ஸ்ரீ பத்மநாபாச்சாரியார் என்பவரும் சிஷ்யர்களாக இருந்திருக்கின்றனர். இவர்கள் சிறந்த வடமொழி பண்டிதர்களென்றும் இவர்கள் சௌராஷ்ட்ர சரிதம் என்பது பற்றி தேவநாகரியில் புத்தகம் எழுதியிருப்பதாகவும் தெரிகிறது. இப்புத்தகத்தில் இவர்கள் நம் சமூக மக்களை ஸௌராஷ்ட்ரர்கள் என்று குறிப்பிட இப்பெயரே நமக்கு நிலைத்ததுடன் நம் சமூகத்தவர் தங்களை ஸௌராஷ்ட்ர தேசத்தவர்களென்றே கருத ஆரம்பித்தனர் என்பது என் அபிப்பிராயம். இதை அடிப்படையாக வைத்துக் கொண்டு தான் பிற்காலத்தில் நம் சமூக வரலாறு எழுதியவர்களும் சமூக வரலாறு பற்றி ஆராய்ச்சி செய்தவர்களும் தகவல் சேகரித்து வருகிறார்கள். நம் சமூகத்தவர் ஸௌராஷ்ட்ர தேசத்திலிருந்து வந்தவர்களென்பதைக் காட்டுவதற்காக பல தவறான கருத்துக்களை ஆதாரமாக எடுத்துக் காட்டுகிறார்கள்.

18. ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மொழியும் எழுத்து வடிவமும்

இதை ஆதாரமாக வைத்துக் கொண்டுதான் திரு தொ. மு. ராமராய் அவர்கள் ஆதிகாலத்திய மொழி ஒன்றை கண்டுபிடித்து இதுதான் நம் சமூக மக்களின் தாய்மொழி என்று சொல்லி அதை மக்கள் கற்றுக் கொள்வதற்காக சில இலக்கிய புத்தகங்களையும் எழுதியுள்ளார். இம்மொழியை பரப்புவதற்கும் இப்போது சிலர் தீவிரமாக முயன்று வருகின்றனர். இன்று உலகம் விஞ்ஞான ஆராய்ச்சியில் (மொழி, பண்பு முதலியவை உள்பட) வேகமாக முன்னேறி வருகையில் இவர்கள் தற்சமயம் ஸௌராஷ்ட்ர தேசத்திலேயே உபயோகத்திலில்லாத ஒரு பழங்கால மொழியை நம் சமூகத்தினரிடையே புகுத்திட முயல்கின்றனர். இதனால் நமக்கு எவ்வித முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை.

சாதாரணமாக மக்கள், செல்வாக்குள்ள ஒருவர் ஒரு விஷயத்தை எடுத்துச் சொன்னால் அதை உடனே ஏற்கிறார்கள். என்னைப் போன்ற அறிமுகமில்லாத ஒருவர் சொல்வதுபற்றி யாரும் மதிப்பதில்லை. இதை உண்மையாக்காமல் என்னுடைய கருத்துக்களை சற்று நிதானமாகவும், கூர்ந்தும் சிந்தித்துப் பார்க்கும்படி கேட்டுக் கொள்கிறேன். திருவள்ளுவர் குறள் ஞாபகப்படுத்துவதாவது

“எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”

மேலும் “உண்மையான வரலாறு என்பது அறிவுப் பூர்வமாக அலசி ஆராயப்பட்டு ஆதாரங்களின் அடிப்படையில் அமைவதே ஆகும். யூகங்களின் அடிப்படையில் அமைவது உண்மையான வரலாறல்ல” என்பதையும் மக்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

19. தாய்மொழியே தேசத்தின் அடிப்படை:

அவரவர் பேசும் மொழியைக் கொண்டு தான் உலகம் பல தேசங்களாகப் பிரிந்துள்ளன நமது இந்திய நாடும் இவ்விதமே மொழி அடிப்படையில் தான் பல தேசங்களாகப்பிரிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் தாய்மொழி ‘மலையாளம்’ என்றால் அவர் கேரள நாட்டைச் சேர்ந்தவரென்றும் ‘தமிழ்’ என்றால தமிழ்நாட்டைச் சேர்ந்தவரென்றும் ‘தெலுங்கு’ என்றால் ஆந்திர நாட்டைச்சேர்ந்தவரென்றும், ‘கன்னடம்’ என்றால் கர்நாடகத்தைச் சேர்ந்தவரென்றும் தீர்மானம் செய்கிறோம் ஆகவே ஒருவர் எந்தநாட்டைச்சேர்ந்தவர் என்பதற்கு மொழி ஒன்றுதான் சரியான அடிப்படை ஆதாரம். தற்சமயம் நம் சமூகத்தினரின் தாய் மொழி மஹாராஸ்ட்ர மொழியின் திரிபு என்பதை பெரும்பான்மை மக்கள் ஒப்புக் கொள்கின்றனர். மஹாராஷ்ட்ர மொழி ஆராய்ச்சியாளர்களும் இதை ஏற்கின்றனர். ஆகவே நாம் நம் தாய்மொழியையே அடிப்படை ஆதாரமாகக் கொண்டு மஹாராஷ்ட்ர தேசத்திலிருந்து வந்தவர்களென்றும் மஹாராஷ்ட்ர சமூகத்தைச் சேர்ந்தவர்களென்றும் முடிவு செய்வதே சிறப்பானதாகும்.

இப்புத்தகம் கிடைக்குமிடம்:

ஏ. எஸ். கிருஷ்ணமூர்த்தி
(கருணா போட்டோ எம்போரியம்)
67, காமராஜர் சாலை
மதுரை - 625 009

அன்பு அச்சகம், மதுரை